# என் பெற்ற தாயை நினைத்துப்பார்க்கிறேன்.

~~~~~~~~~~~~~~~~~~

அம்மா! நீங்க இன்று எம்முடன் இல்லை. எம்மை விட்டுப் பிரிந்து இன்று 25 வருடங்களாகிவிட்டது. எனது நினைவுகூருதல் இந்தநாள் மட்டுமல்ல, ஒவ்வொரு நிமிடமும் உங்களை என் இருதயத்தில் நினைத்துக்கொண்டு தானிருக்கிறேன். உங்கள் மூத்த பிள்ளையென்று என்னைக் குறித்து உங்கள் இருதயத்திலிருந்த அன்பும் பாசமும் அந்நேரம் நான் உணராதிருந்த வயது. ஆனால், இன்று ஒவ்வொரு நொடியும் அதை நினைத்து எனக்குள் அழுதுகொண்டுதானிருக்கிறேன். இதை யாருமே அறியவோ புரிந்துகொள்ளவோமாட்டார்கள். எனது பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையும் அணைத்துக் கொஞ்சி உங்கள் அன்பைப் பொழிய இன்று நீங்கள் இல்லை. எனது வாலிப வயதுவரை எனக்கு நீங்களே உடுப்புகள் தைத்து அழகுபார்த்தீர்களே, என் பிள்ளைகளுக்கு அவ்விதமாக அழகுபார்க்க நாட்டின் சூழ்நிலைகளும் உங்கள் சரீர பெலவீனங்களும் அன்று தடையாகபோய்விட்டதே.
ஆனாலும் அம்மா! உங்கள் மூத்த மகனாகிய எனக்காக நீங்கள் ஆயத்தப்படுத்தி தாலாட்டி அழகுபார்த்த தொட்டிலிலே எனது மூத்த மகனை (உங்கள் பேரனை) பெரிய ஆசையோடு வளர்த்தி அழகு பார்த்தீர்களே… அதில் நீங்கள் அடைந்த அந்த சந்தோஷத்தை இன்றும் நான் நினைக்கும்போதெல்லாம் அம்மா என்னால் தாங்கவேமுடியவில்லை.
அம்மா! நீங்கள் எங்களைவிட்டுப் பிரியும்போதுகூட உங்கள் அருகில் இருக்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைக்கவில்லையே. 1996ம் ஆண்டு நான் குடும்பமாக இலங்கைக்கு வந்தபோது உங்கள் இயலாத நிலையிலும் சக்கர நாற்காலியில் இருந்தவண்ணம் உங்கள் வலது புறத்தில் எனது மகனும், இடது புறத்தில் எனது தங்கையின் மகனும், உங்களுக்குப் பின்னாக எனது மகனும் நின்றபடி எடுத்த போட்டோவை பார்க்கும்போதெல்லாம் என் கண்கள் இப்பொழுதும் கலங்குகிறது. இது சாதாரண போட்டோ அல்ல. என் தேவன் எனக்கு ஆயத்தப்படுத்தித்தந்த அன்பின் நினைவின் சின்னமாகவே எண்ணுகிறேன். இதை எனது பாக்கியமாகவும் கருதுகிறேன். அம்மா! உங்கள் பேரப்பிள்ளைகளோடு நீங்கள் சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் அந்தக் கெம்பீரம் அம்மா உங்கள் இயலாத நிலையிலும் குறையவேயில்லை. இந்த கெம்பீரத்தோடுதான் என்னையும் எனது சகோதரங்களையும் நீங்கள் வளர்த்தெடுத்தீர்கள்.
அம்மா! எமது சந்தோஷமான குடும்ப வாழ்க்கையில் பொறாமைகொண்ட உங்கள் உறவினர்களால் நீங்கள் வியாதிப்படுக்கையில் பல கஷ்டங்களை அனுபவித்தபோதும் எனது பப்பாவும் என் தங்கையும் எங்கள் வீட்டிலும், நீங்களும் நானும் என் இரண்டு சகோதரங்களும் உங்கள் வைத்தியத்துக்காக வேறிடத்திலுமிருந்த அந்த வேதனையான காலம் சாதாரணமானதல்ல. அப்பொழுது எனது சிறிய வயதில் நீங்கள் சொல்லச் சொல்ல உங்களுக்கும் என் இரண்டு சகோதரங்களுக்கும் நான் உணவு சமைத்துத்தந்த அந்த காலங்களை நான் இப்போ பாக்கியமாக கருதுகிறேன். எனது பப்பாவை இழந்தபோதும் நீங்கள் சோர்ந்துபோகாமல் என்னையும் எனது சகோதரங்களையும் கஷ்டம் எதுவும் தெரியாமல் கௌரவமாக வளர்த்தீர்களே. உங்கள் மூத்த மகன் என்ற வகையில் நான் நன்கு அறிந்திருக்கிறேன் அம்மா. எந்த சூழ்நிலையிலும் யார் முன்னிலையிலும் உங்கள் கெம்பீரமான நடை, கெம்பீரமான பேச்சு, கெம்பீரமான செயல்கள் அனைத்தையும் இன்றும் என் கண்முன் நிறுத்திப்பார்த்து பெருமிதம் கொள்ளுகிறேன் அம்மா.

அம்மா! நான் உங்கள் மூத்த புதல்வன் என்பதால் என் குழந்தைப் பருவத்திலேயே பப்பாவும் நீங்களும் என்னை ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்ய அர்ப்பணித்துவிட்டீர்கள். நான் வளர வளர உங்கள் அர்ப்பணிப்பை எனக்கு அவ்வப்போது நினைவூட்டி வளர்த்துவந்தீங்க. நீங்க ஜீவனுள்ள தேவனுடைய கட்டளைகளை அறிந்தவர்களென்றும், அதின்படி நடக்க உங்களை ஒப்புக்கொடுத்த பெற்றோர் என்பதையும் நான் அறிந்து, எனக்கு இப்படிப்பட்ட தேவபக்தியுள்ள பெற்றோரை தந்ததற்காக என் தேவனுக்கு முன்பாக பணிந்து அவரை நன்றியுடன் ஸ்தோத்தரிக்கிறேன்.

‘முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதெனப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறது’ (லூக்கா 2:23)

அம்மா! உங்களுடைய இந்த மாபெரும் அர்ப்பணிப்பை அந்தநாளில் நான் உணராவிட்டாலும் கர்த்தர் சகலதையும் அறிந்தவர். அவர் அதை ஏற்றகாலத்திலே நேர்த்தியாய் செய்துமுடித்திருக்கிறார். இன்று நானும் எனது குடும்பமும் அவரது கனமான ஊழியத்துக்கென்று அழைக்கப்பட்டு அவருக்கு ஊழியஞ்செய்துவருகிறோம். என் சந்ததியும் உங்கள் அர்ப்பணிப்பால் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது அம்மா. உங்கள் ஆசையை நமது கர்த்தர் நிறைவேற்றி முடித்திருக்கிறார்.
அம்மா! எனது இருதய புலம்பலை நீங்கள் கேட்கமாட்டீர்கள். ஏனென்றால், நீங்கள் இவ்வுலக வாழ்வை முடித்துவிட்டீர்கள். ஆனால், கர்த்தர் இயேசு உறுதியான நம்பிக்கையை எமக்குத் தந்திருக்கிறார். ஒருநாள் அவரது வருகையில் உங்களையும் பப்பாவையும் சந்திக்க பெரும் கிருபையளிப்பார். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும்.

*‘ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப்*
*பின்பற்றக்கடவன்…. ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால்*
*அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்’*
*(யோவான்12:26)*
~~~~~~~~~~~~~~~~~~

**அப்பொழுது உங்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி உண்டாகும். அதற்காக நமது கர்த்தரை மீண்டும் ஸ்தோத்திரித்து அவருக்குள் என்னைப் பெலப்படுத்திக்கொள்ளுகிறேன். என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாற்றுவார். (சங்கீதம் 30:11)**

**இப்படிக்கு,**
**உங்கள் மூத்த மகன்**
**Joseph Rajasingham-Germany**